திரு. ஆ. கு. சுப்பையா: தலைவரவர்களே மத்திய அரசாங்கத்திலிருந்து இசைவுக் கடிதம் கிடைத்து விட்டதா? கிடைத்து இருந்தால் என்ன விவரம் சொல்லி அனுப்பியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, மத்திய அரசாங்கம் ஏற்கனவே இந்தத் தொழிலில் உற்பத்தி அதிகம் இருக்கிறது என்பதால் புதிய தொழில் தேவையில்லை என்று கருத்துத் தெரிவித்து இருக்கிறார்கள்.

Stoneware Pipes Unit at Vridhachalam

*273 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any market survey has been conducted by the Stoneware Pipes Unit of the Tamil Nadu Small Industries Corporation Limited at Vridhachalam; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திருப்புவனம் வட்டாரத்தில் கயிறு தயாரிப்புத் தொழில்

*274 வினா—திரு. த. சோனையா: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் வட்டாரத்தில் தென்னை நாரைக் கொண்டு கயிறு தயாரிக்கும் தொழிற்சாலை அரசுத் துறையில் அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

திரு. த. சோனையா: தலைவரவர்களே, திருப்புவனம் வைகை யாற்றின் இருமருங்கிலும் தென்னை மரங்கள் அதிகமாக இருக்கின்றன. ஆகவே, தென்னை மட்டைகள் அதிகமாகக் கிடைக்கின்றன. அதனால் அரசாங்கம் அங்கே ஒரு தொழிற்சாலையை நிறுவ இனியாவது ஏற்பாடு செய்யுமா?

1973 நவம்பர் 21]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, அந்தத் தொழிற்சாலையைச் சிறு தொழிலாக ஆரம்பிக்க வேண்டுமென்று முடிவு எடுத்து இருக்கிறோம். தஞ்சை மாவட்டத்தில் 20 இடங்களில் தொடங்கப்பட்டிருக்கிறது. அதற்கு அரசாங்கம் ஏராளமாகப் பண உதவி செய்கிறது. ஒரு சிறிய தொழிற்சாலை ஏற்படுத்தி கயிறு தயார் செய்ய வேண்டுமானால் சுமார் 10,000 தென்னை மரங்களாவது வேண்டும். அப்படியிருப்பதாகக் கூறி மனு செய்தால் உடனடியாக அந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்த அரசு உதவி செய்யும்.

திரு. எஸ். வடிவேல்: தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் எந்தெந்த இடங்களில் இந்தத் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டிருக்கின்றன? எத்தனைத் தொழிற்சாலைகள் என்பதை அமைச்சர் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: எந்தெந்த இடங்கள் என்பது என் கைவசம் இல்லை. பட்டுக்கோட்டைப் பகுதியில் இருக்கிறது என்று நினைக்கிறேன். அண்மையில் தான் சென்று திறந்து வைத்து விட்டு வந்தேன். மொத்தம் 20 நிறுவப்பட்டிருக்கின்றன.

Issue of pattas

* 275 *Q.*—THIRU A. PARANDHAMAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to give full powers to Tahsildars to issue Pattas (D. Forms) of poramboke lands to the landless; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவரவர்களே, ஒரு சிறிய ஏழை புறம்போக்குப் பட்டா பெறவேண்டுமானால் முதலில் தாசில்தார் அவர்களுக்கு மனு செய்யவேண்டும், தாசில்தார் பரிசீலனை செய்து கோட்டாட்சித் தலைவருக்கு அனுப்பி, கோட்டாட்சித் தலைவர் பரிசீலனை செய்து மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிக்கு